Influenza

* 166 *Q.*—SRI K: SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any new anti-influenza vaccine was used to prevent the new type of influenza from spreading;

(*b*) if so, whether it is made available to the public;

(*c*) whether the Pasteur Institute, Coonoor, has been of any assistance in preventing the spread of this disease; and

(*d*) if so, how?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) & (*d*) The Government of India Influenza Centre at Coonoor has issued a press release regarding the simple methods to be adopted for the prophylactic treatment of influenza. The centre is engaged in research work on different influenza virus strains and the production of vaccines. They are, at present reported to be working on the isolation of the Singapore strain of virus and the production of vaccine. This Government have addressed the Government of India to give top priority for the production and supply of influenza vaccine to this Government from the Madras strain of virus and their reply is awaited.

SRI K. S. G. HAJA SHERIFF: May I state for the information of the House that it is not entirely correct to say that " Rajula " or " State of Madras " brought influenza; if sufficient precaution is taken to control influenza on board the steamer itself; it is possible to control the spread of the disease. When the " State of Madras " arrived she did not bring in any influenza due to the preventive measure taken and it can be verified from the Government department.

MR. SPEAKER: The hon. Member is only giving information. It is not necessary to give any answer.

SRI K. ANBAZHAGAN: இந்த இன்ப்ளூயென்ஸாவைத் தடுப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற மருந்தோ அல்லது இந்த அரசாங்கத்தினரால் தயாரித்து அளிக்கப்படக்கூடிய வாக்ஸின் மருந்தோ நீண்ட நாள் ஸ்டாக்கில் வைக்கமுடியாது என்று தெரிகிறது. ஆகவே அந்த மருந்தை அவ்வப் போது தயாரித்துக்கொள்ளக்கூடிய விதத்தில் அதற்கேற்ற முன் ஏற் பாட்டை இந்த அரசாங்கம் செய்துகொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: புதிதாக வரும் இன்ப்ளூயென்ஸாவின் **virus** எப்படி வருமோ, அது எப்படி வரும் என்று அதற்கு மாற்றி மாற்றி தயாரிக்க வேண்டியிருக்கும். அது இன்னும் முடிவாகவில்லை. அது முடிந்த பிற்பாடு, அதை அடிக்கடி தயார் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY: இந்த இன்ப்ளூயென்ஸா காய்ச்சலானது வெளிநாட்டிலிருந்து கப்பல் புறப்பட்டு எந்த வேகத்தில் வந்ததோ, கப்பல் நெருங்குகிற நேரத்தில் எவ்வளவு குறைவாக போகிறதோ அந்த அளவில் போய்விடும் என்று சொன்னார். ஆனால் இந்த நாட்டில்

வயிற்றுக்காய்ச்சல் என்பது வளர்ந்துகொண்டே இருப்பதால் அதைப் போக்க என்ன நடவடிக்கைகள் அமைச்சரவர்கள் எடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு வாக்ஸின் வேண்டியதில்லை. வேறுவிதமான முறையைத்தான் அனுசரிக்க வேண்டும்.

Madras Shops and Establishments Act, 1947

* 167 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any amendment to the Shops and Establishments Act to regulate the overtime work in private companies in this State is under consideration?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

* 168 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri S. Pakkirisami Pillai) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Special Officer appointed for the revision of the Madras Shops and Establishments Act, 1947, has submitted his report?

THE HON. SRI R. VENKATARAMAN : No special officer was appointed for the revision of the Madras Shops and Establishments Act, 1947. A Special Officer appointed in 1952 to survey and report about the working of the Madras Shops and Establishments Act, 1947, with special reference to the question of launching prosecutions for offences and granting exemptions, has submitted his report.

SRI V. K. KOTHANDARAMAN : 1953-வது ஆண்டிற்கு முன்னால் ஒரு தொழிலாளியாக இருந்தாலும் அதற்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும் ஷாப் சட்டத்தில் இருக்கக்கூடிய சலுகைகள் இருந்து வந்தது. 1953-க்கு பிறகு நான்கு தொழிலாளர்களுக்கும் அதற்கு மேற் பட்டவர்களுக்கும்தான் அந்த சட்டம் என்ற முறை வந்த பிறகு இப்பொழுது 6, 7 பேர்கள் வேலை செய்யக்கூடிய இடத்திலே 1, 2, 3 என்கிற அளவிற்கு கணக்கு எழுதிவருவதினால் தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதை சென்ற சட்டசபையில் கேட்டபோது, மத்திய சர்க்கார் இதை பரிசீலனை செய்து வருகிறது என்றும் விரைவிலே பழையபடி சட்டம் கொண்டுவரப்படும் என்றும் சொல்லப்பட்டது. ஆகவே இப்பொழுது உடனடியாக ஒரு தொழிலாளி இருந்தாலும் பல பேர்கள் இருந்தாலும் ஷாப் சட்டப்படி உள்ள சலுகைகள் பெறக்கூடிய அளவில் மீண்டும் சட்டம் கொண்டுவரப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் பல கேள்விகளை சேர்த்து போட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கொண்டு வருகிற சட்டம் வேண்டுமா வேண்டாமா என்று இரு சட்டத்தையும் பரிசீலனை செய்துபார்த்து அபிப்பிராயம் சொல்லும்படி கேட்டுக்கொள் கிறேன். மத்திய சர்க்கார் சட்டத்திலுள்ள சலுகைகளை விட நம் மாகாண ஷாப் அண்டு எஸ்டாப்பிளிஷ்மெண்ட் அக்டில் இருக்கிற சலுகைகள் அதிக மாக இருக்கிறது. அடுத்தபடியாக சட்டத்தை மீறி யாராவது 6, 7 பேர்கள் இருக்கிற இடத்தில் ஒன்று இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று பொய் கணக்கு வைத்துக்கொண்டு இருந்தால் அதைப்பற்றி புகார் செய் தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும்.